ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2228/41 - 2021 මැයි මස 21 වැනි සිකුරාදා - 2021.05.21

*2228/41 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், ருவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் இபுலான நீர் சேகரிப்புத் தாங்கிக்குரிய உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றின் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் வழியுரிமையைச் சுவீகரித்துக்கொள்வது இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/04/KE/20.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, மே 18.

1A – G 34376 – 37 (2021/05)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தில், றுவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில், சியபலாவல 100 B கிராம அலுவலர் பிரிவில் சியபலாவல கிராமத்தில் அமைந்துள்ள பிடர்ஹில் வத்த காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 02 பேர்ச் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : பிரதேச சபை வீதி ;
கிழக்கு : ஆர். எம். சிரில் அவர்கள் உரிமை கோருகின்ற காணி ;
தெற்கு : குறித்த வீதியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பு இலக்கம் : KE/EWN/2019/128 இன் A பகுதி மற்றும் B பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* திரு. ஆர். எம். சிரில்,
இலக்கம் 204, பிடர்ஹில் கிராமம்,
இபுலான.

*06-84*